சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 19.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **123/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-10 |
| சாட்சியின் பெயர் | : | கபிலன் |
| தந்தை பெயர் | : | சண்முகசுந்தரம் |
| கிராமம் | : | குன்னியூர், மாவூர், |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். |
| வயது | : | 24 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

## முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன்.நான் இந்து பறையன் இனத்தை சேர்ந்தவன் ஆவேன். அ.சா.1 குமாரை தெரியும், ஆஜர் எதிரியை

தெரியும். ஆஜர் எதிரி தேவர் வகுப்பை சேர்ந்தவர். ஆஜர் எதிரி எனது நண்பர் ஆவார். அ.சா.1 ஆன குமாரின் மகளான நந்திதாசினி என்பவரை எனக்கு தெரியும். நானும், இறந்துபோன நந்திதாசினியும் ஒருவரையொருவர் விரும்பினோம். அந்த பெண்ணிடம் செலவிற்காக பணம் கேட்டேன். என்னிடம் G.Pay இல்லை என்பதால் எனது நண்பரான எதிரியின் G.Pay க்கு பணம் போட சொல்லியிருந்தேன். அதன் பின்னர், அந்த நந்திதாசினி ஆஜர் எதிரியிடம் பேச ஆரம்பித்தார். நான் இதை நந்திதாசினியும் ஆஜர் எதிரியும் பேசிக்கொள்வதை கண்டித்தேன். அதன்பின்னர் ஆஜர் எதிரி உன்னால் என்ன பண்ண முடியும், உன்னால் முடிந்ததை பண்ணிக்கொள் என்று என்னை பேசினார். அதன்பின்னர் நான் நந்திதாசினியிடம் பேசுவதை விட்டுவிட்டேன். அதன்பின்னர் எதிரியும், நந்திதாசினியும் பேசிக்கொண்டிருந்தார்கள். பின்னர் ஆஜர் எதிரி வாட்ஸாப், இன்ஸ்டாகிராம் ஆகியவற்றில் எதிரியும், நந்திதாசினியும் பேசிக்கொண்டார்கள். இருவரும் காதலிப்பது தொடர்பான புகைப்படங்களை செல்போனில் பார்த்தேன். திருத்துறைப்பூண்டி காவல் துறையினர் என்னை விசாரித்தனார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

நானும், நந்திதாசினியும் எத்தனை வருடம் காதலித்தோம் என்றால், 4 வருடங்கள் காதலித்தோம். காதலித்தபோது நந்திதாசினியுடன் தனியாக வெளியில் செல்வது வழக்கம் என்றால் தவறு. நந்திதாசினியிடம் நான் பணம் கேட்டேன் என்று சொன்னால் ஆமாம். நானும், நந்திதாசினியும் தனிமையில் உடலுறவு கொண்டோம் என்றும், அவ்வாறு இருந்ததை புகைப்படம் எடுத்தேன் என்று சொன்னால், நான் நந்திதாசினியுடன் உடலறவு எதுவும் வைத்தக்கொள்ளவில்லை. உண்மையில் நந்திதாசினியுடன் நான் உடலுறவு வைத்துக்கொண்டேன் என்றும், அதை புகைப்படமாக எடுத்து அவருக்கு அனுப்பி நான் மிரட்டி பணம் கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நந்திதாசினியிடம் புகைப்படத்தையும்,

வீடியோவையும் வாட்ஸாப், பேஸ்புக், இன்ஸ்டாகிராமில் பதிவு செய்து விடுவேன் என்று மிரட்டி பணம் கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நானும், நந்திதாசினியும் காதலித்த விபரம் நந்திதாசினியின் பெற்றோருக்கு தெரியும் என்றால் சரிதான். நந்திதாசினியின் பெற்றோர் எனக்கு என்ன உறவினர் என்றால் மாமா, அத்தை ஆவார்கள். எதிரியும், நந்திதாசினியும் ஒன்றாக இருப்பதை நான் எப்போதாவது பார்த்துள்ளேன் என்று சொன்னால் பார்த்துள்ளேன். எப்போது பார்த்துள்ளேன் என்று சொன்னால் தேதி எனக்கு ஞாபகமில்லை. நந்திதாசினியின் பெற்றோர் எனது உறவினர் என்ற காரணத்தால், அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, எதிரிக்கு எதிராக பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நந்திதாசினியின் இறப்பிற்கு நான்தான் காரணம் என்றால் சரியல்ல. நந்திதாசினியும் நானும் இருந்த புகைப்படங்களை பொது வெளியில் பதிவு செய்வேன் என மிரட்டிய காரணத்தால், நந்திதாசினி இறந்து விட்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் நந்திதாசினியின் இறப்பிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.19 16:50:29 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு ) வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.